This Question Paper consists of 31 questions 8 printed pages.
8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.

Roll No.
பதிவு எண்:

Code No.
குறியீடு எண்: **65/S/A/TM**

Set / செட் **A**

# TAMIL
# (தமிழ்)
# (237)

Day and Date of Examination ..........................................................................
(தேர்வு நாள்) :

Signature of Invigilators 1. ..........................................................................
(தேர்வு மேற்பார்வையாளர்களின்
கையொப்பங்கள்) : 2. ..........................................................................

**பொதுக்குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (அ, ஆ, இ, ஈ) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.
4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களுக்கும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
5. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
6. உங்களது வினாத்தாளின் எண்ணை குறியீடு எண்: 65/S/A/TM செட் A விடைத்தாளில் எழுதவும்.

# TAMIL
# (தமிழ்)
# (237)

கால அளவு : 3 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**பொதுக் குறிப்புகள் :** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (அ, ஆ, இ, ஈ) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

**குறிப்பு :** 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

2. விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

பொருத்தமான விடையை எடுத்து எழுதுக : 1×11=11

**1.** மராட்டியருக்கு எதைப் பரிசளிக்க பாரதி விரும்புகின்றார்?

(அ) கோதுமைப் பண்டம்

(ஆ) கேரளத்து யானைகள்

(இ) வெற்றிலை

(ஈ) நறுமணப் பொருள்கள்

**2.** இயற்கை வளம் ஓங்குவதால் மக்கள்............ செழிக்கும்

(அ) நலம்

(ஆ) புகழ்

(இ) பலம்

(ஈ) வருமானம்

**3.** இந்திரனை வென்றவன் யார்

(அ) தசரதன்

(ஆ) இராமன்

(இ) சம்பரன்

(ஈ) வசிட்டர்

**4.** குறத்தியர் யானைக் கொம்புகளால் ................ இடிப்பர்

(அ) அரிசி

(ஆ) தினை

(இ) கம்பு

(ஈ) சோளம்

5. தேசத்திற்கான இரண்டாவது தொலைநோக்கு

(அ) வளர்ந்த இந்தியா

(ஆ) பொருளாதார முன்னேற்றம்

(இ) அனைவருக்கும் கல்வி

(ஈ) அனைவருக்கும் வேலை வாய்ப்பு

6. நடுநிலை தவறாதவன்

(அ) இராமன்

(ஆ) தசரதன்

(இ) கூற்றுவன்

(ஈ) வசிட்டர்

7. ஒரு நாடு முன்னேற எது வேண்டும்

(அ) இயற்கை வளம்

(ஆ) செல்வம், புகழ்

(இ) ஒழுங்கு, கடமை

(ஈ) உழைப்பு, ஒற்றுமை

8. சுந்தரர் ஒரு நாள் எந்த ஊருக்குச் சென்றார்

(அ) திருவரங்கம்

(ஆ) திருச்சுழியல்

(இ) திருவாதவூர்

(ஈ) திருத்தணி

9. வன்முறையற்ற வாழ்க்கை எப்போது சாத்தியம்

(அ) சிந்தித்துச் செயல்பட்டால்

(ஆ) நன்றாகப் படித்தால்

(இ) கீழ்ப்படிந்து நடப்பதால்

(ஈ) வகைப்பறைக்குள் கிடப்பதால்

10. உயிர்மெய் எழுத்துகள் மொத்தம்

(அ) 247

(ஆ) 126

(இ) 216

(ஈ) 226

**11.** அடுக்குத் தொடர்

(அ) கலகல

(ஆ) பட பட

(இ) வா! வா!

(ஈ) தாய்தந்தை

**12.** கீழ்க்காணும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் :

ஏனைய உயிர்களும் ஒலியைத் தோற்றுவிக்கின்றன. நாய்கள் குரைக்கின்றன; பூனைகள் கத்துகின்றன; அரிமாக்கள் முழங்குகின்றன; ஆடுகள் அலறுகின்றன; குதிரைகள் கனைக்கின்றன; களிறுகள் பிளிறுகின்றன; மயில்கள் அகவுகின்றன; காகங்கள் கரைகின்றன; குயில்கள் கூவுகின்றன; இவ்வாறு அவை ஒலிகளை எழுப்புவதால் தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன என்பது உண்மைதான். என்றாலும் மக்களைப் போல அவை வரம்பின்றி வெளிப்படுத்தும் ஆற்றல் பெறவில்லை. மகிழ்ச்சி, பசி, சீற்றம் முதலிய உணர்ச்சிகளைத்தாம் அவை வெளிப்படுத்தக் கூடுமேயன்றி உள்ளத்தெழும் கருத்துகளை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றில. மக்கள் வெளிப்படுத்தும் மொழியாம் ஒலி நூற்றாண்டுகள் தோறும் வேற்றுமையடைந்து வருகின்றது.

**வினாக்கள் :**

1. விலங்குகளின் ஒலிகளை எழுதுக. 3
2. யானை என்ற பொருள் தரும் சொல் எது? 2
3. அரிமா என்ற சொல்லின் பொருள் என்ன? 2
4. விலங்குகள் பெறாத ஆற்றல் என்ன? 3
5. நூற்றாண்டுகள் தோறும் வேற்றுமையடைந்து வருவது எது? 1

**13.** பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க :

கல்வி பெறும் மாணவப் பருவம் கண்டீர்
கவலையற்ற களிசிறந்த காலமாகும்
தொல்லைமிக்க உலகநடைச் சூழலில் நேரும்

துன்பங்கள் துயரங்கள் நேராக் காலம்
எல்லையற்ற ஆர்வமுள்ள இக்காலந்தான்
எக்கலையும் பியல்வதற்கும் ஏற்ற காலம்
நல்வழியில் பயன்படுத்தும் மாணவர்க்கே
நாமகளின் திருவருளின் நலங்கள் கூடும்

**வினாக்கள் :**

1. மனித வாழ்க்கையில் கவலையற்ற பருவம் எது? 1
2. உலக நடைச் சூழலை கவிஞர் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்? 1
3. எக்கலையும் பயில மாணவப் பருவம் ஏன் ஏற்புடையதாக இருக்கிறது? 2
4. நாமகளின் திருவருள் யாரைச் சென்றடையும்? 2

**14.** கல்வியின் சிறப்பு யாது? 1

**15.** குறவர் இனக் குல ஒழுக்கம் யாது? 1

**16.** முத்தாச்சியின் தோற்றம் எவ்வாறு இருக்கிறது? 1

**17.** காந்தியடிகள் கொண்ட கோலம் எது? 1

**18.** தமிழில் மொழி பெயர்க்க : 2

(அ) Automation

(ஆ) Intial

**19.** அ. சேர்த்து எழுதுக : 4×½=2

*(i)* மணல் + கேணி

*(ii)* ஏமாப்பு + உடைத்து

*(iii)* சென்று + இரப்பர்

*(iv)* ஆறு+சுவை

ஆ. கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு சொற்களை எழுதுக. 2

1. கை
2. லை

இ. கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக : 2

1. பிறர்க்கு நன்மை செய்யாவிடினும் ______ செய்யாமலிரு.
2. இளமையில் உழைப்பவர் ______ இன்புறுவர்

ஈ. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக : 2

1. இமையோர்
2. கறுத்த
3. சுரும்பு
4. விழுமை

**20.** பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க : 2

1. வாழையடி வாழை
2. கிள்ளுக்கீரை

**21.** கடிதம் பொருள் கூறுக. 1

**22.** நதி நீர் இணைப்பு சாத்தியமா? என்பது குறித்து ஒரு குறிப்புரை எழுதுக. 4

**23.** பெரியோர் வாழும் முறை குறித்துப் பழமொழி கூறும் செய்தி யாது? 5

**24.** 'காற்று மாசை குறைக்க உதவுங்கள்' என்பது குறித்த அரசு அறிவிப்பினை எழுதுக. 5

அல்லது

குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தி தரும் தாய்ப்பால் தருவதி குறித்த விளம்பரம் எழுதுக.

**25.** அ. வேலை - வேளை பொருள் வேறுபாடு கூறி அவற்றை தொடரில் அமைத்து எழுதுக. 2

ஆ. ஊளையிடுதல்-கர்ஜித்தல்-இவை எவ்விலங்குகளுக்குரிய ஒலிகளாகும். 2

**26.** பள்ளி 'தமிழ் இலக்கிய மன்றம்' சார்பாக வெளியிடப்படும் மலருக்காக வரவேற்கப்படும் படைப்புகள் குறித்துத் தகவல் பலகையில் இடம் பெறும் செய்திகள் குறித்து ஒரு அட்டவணை தயாரிக்க. 5

அல்லது

வங்கியில் பணம் செலுத்தும் படிவத்தைப் பூர்த்தி செய்க.

சென்னை மத்திய கூட்டுறவு வங்கி லிட்...

பெருங்குளத்தூர் கிளை

| விபரம் | ரூ | பை |
|---|---|---|
| 1000 x ........ | ........ | |
| 500 x ........ | ........ | |
| 100 x ........ | ........ | |
| 50 x ........ | ........ | |
| 20 x ........ | ........ | |
| 10 x ........ | ........ | |
| 5 x ........ | ........ | |
| காசுகள் | | |
| காசோலை/ டிராப்ட் | | |
| கூடுதல் | ........ | |

தேதி (அ) ......................

ரூபாய்.(ஆ).......................

திரு/திருமதி (இ).... .............................................

.............................................................................

........... உடைய சேமிப்பு கணக்கில் வைப்பதற்காக

ரூபாய் .................................................................

சேமிப்பு கணக்கு எண் (உ) ......................

செலுத்துனர்: (ஊ).................

காசோலை/டிராப்ட் எண்:............. காசாளர் .............. எழுத்தர் ............ மேலாளர் .................

குறிப்பு: [1875234703187 என்பதை வங்கிக் கணக்கு எண்ணாகவுடைய கபிலன் / கவிதா எட்டு 2000 ரூபாய் தாள்களையும் நான்கு 500 ரூபாய் தாள்களையும் மூன்று இருபது ரூபாய் தாள்களையும் மூன்று பத்து ரூபாய் தாள்களையும் 22.11.2018 அன்று வங்கியில் செலுத்துவதாகக் கொள்க.]

**27.** சிவன் காளீஸ்வரன் ஆன வரலாற்றை எழுதுக. 5

அல்லது

தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்காக காந்தி ஆற்றிய தொண்டினை விவரிக்க.

**28.** பிழை திருத்தம் செய்க : 5

1. காளையில் எலுவது சாளவும் நன்று.
2. காளம் பொண் போண்றது.
3. வாலு! வாள விடு!
4. கழுதை கனைக்கும்.
5. வாய்மையே வெள்ளும்.

**29.** பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநிலத்தில் முதலிடம் பிடித்த நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக. 7

அல்லது

தமிழாசிரியர் வேலை வேண்டி தனியார் பள்ளி ஒன்றிர்க்கு விண்ணப்பக் கடிதம்.

**30.** பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை விளக்கி நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. : 5

(அ) நான் சுவைத்த கவிதை

(ஆ) நாளிதழ்

(இ) இணையத்தின் பயன்பாடு

**31.** இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக. 10

(அ) நூலகத்தின் அவசியம்

(ஆ) முயற்சி திருவினையாக்கும்

(இ) நான் விரும்பும் தலைவர்

★★★